22nd September 1961]

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The proposal to construct air-conditioned coaches will be taken up as soon as air-conditioning equipments and necessary spare parts become available in the market.

SRI A. A. RASHEED : Sir, may I know the estimate for air-conditioning a single bus?

THE HON. SRI V. RAMAIAH : The approximate cost is reported to be about Rs. 1,40,000.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்த நீண்ட தொலைவு பஸ்களில் குளிர் சாதனங்கள் அமைப்பதற்கு நாளாகும் என்று சொன்னாலும், இந்த வண்டிகளில் இப்போது அமைக்கப்பட்டிருக்கும் ஸீட்டுகள் வசதியாக அமைக்கப்படவில்லை, ஆகவே இதை நல்ல வசதியான ஸீட்டுகள் அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI V. RAMAIAH : இப்போது வசதியான ஸீட்டுகள் தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் வசதியாக அமைக்கவேண்டும் என்று சொல்வதாக இருந்தால் அதைப் பற்றி மீண்டும் பரிசீலனை செய்வதற்கு சம்பந்தப்பட்ட இலாக தயாராக இருக்கும்.

SRI V. K. KOTHANDARAMAN : நீண்ட தூரம் போகும் பஸ்களில் எர்–கண்டிஷன் அமைக்கப்படும் என்று சொல்லும்பொது, எத்தனை மைல் தூர முள்ள இடத்திற்கு போகும் பஸ்களை நீண்ட தூரமுள்ள பஸ்கள் என்று எடுத்துக்கொள்ளப்படும்.

THE HON. SRI V. RAMAIAH : 120 மைல்களுக்கு மேல்.

Long distance express buses

* 1707 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the details of additional long distance routes proposed for plying express buses by the State Transport during the current year; and

(*b*) when the services are expected to commence?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The following routes are proposed to be operated :—

(1) Nagapattinam-Coimbatore.
(2) Nagercoil-Ramanathapuram.
(3) Tiruchirappalli-Mandapam.
(4) Thanjavur-Shencottah.
(5) Thanjavur-Ramanathapuram.
(6) Madras-Salem (via) Tiruvannamalai.
(7) Ootacamund-Madurai.
(8) Vellore-Tiruchirappalli (via) Arni, Gingee, Villupuram, Ulundurpet.
(9) Madras-Salem-Coimbatore.

(*b*) The services will be operated as expeditiously as possible after complying with the statutory provisions in Chapter IV-A of the Motor Vehicles Act.

[22nd September 1961

SRI M. KALYANASUNDARAM : திருச்சியிலிருந்து பங்களூருக்கு பஸ் விடும் யோசனை எந்த அளவில் இருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : இப்போது யோசனையில் இருப்பதை எல்லாம் சொல்லிவிட்டேன்.

SRI M. KALYANASUNDARAM : இது யோசனையில் இல்லையா ?

THE HON. SRI V. RAMAIAH : இதற்குத் தனியாக கேள்வி வேண்டும்.

SRI K. ANBAZHAGAN : இப்போது கூறப்பட்ட நீண்ட தூர பஸ்கள் எப்போது விடப்படும் ? அதோடு சிதம்பரத்திலிருந்து மது ரைக்குப் பஸ் விட வேண்டும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக் கிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : என்னுடைய பதிலில் பி. பிரிவில் "The services will be operated as expeditiously as possible after complying with the statutory provisions in Chapter IV-A of the Motor Vehicles Act என்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்கதனதிர் அவர்கள் கேட்கும் வேறு கேள்விகளுக்கு என்னிடம் இப்போது தகவல் இல்லை.

Compost Manure

9-00 a.m. *1708 Q.—SRI V. SUBBIAH ; கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959-60-ம் வருஷம் தயாரித்த கம்போஸ்ட் உரம் 1958-59-ம் வருஷம் தயாரித்ததைவிட அதிகமா அல்லது குறைவா ?

(இ) அதற்கான காரணங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The production of compost in 1959-60 was more than that in 1958-59.

(*b*) The increase was due to loan facilities afforded by Government to municipalities and notified panchayats and the appointment of special staff of Compost Development Inspectors in the selected blocks.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : With a view to creating more incentives to the ryots, is there any proposal before the Government to give subsidy to the ryots who take up this compost manufacture?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no proposal to add to the subsidies, aid and support that are being given to those who prepare compost.

SRI V. SUBBIAH சார், இந்த ரசாயன உரத்தில் உள்ள மோகமானது இந்த விவசாயிகளை விட்டு மாற கம்போஸ்ட் உரத்தை மேலும் விளம்பரப்படுத்தி, விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுத்து மேலும் இந்தத் திட்டத்தை நல்ல முறையில் பயன்படுத்தப் புதிய திட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM ; அடியோடு ரசாயன உரத்தில் இருக்கும் மோகத்தை எடுத்துவிட முடியாது. அப்படி எடுத்துவிடுவதும் சரியல்ல. ஓரளவு ரசாயன் உரமும் வேண்டியதுதான். ரசாயன உரத் தையே நம்பிக்கொண்டிருக்காமல் இருப்பதற்காக கம்போஸ்ட் உர